## கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்

## அ.வ.எண்.401/2022

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ம் நாள் வெள்ளிக்கிழமை **பி.வா.சா.1**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வெங்கடாசலம் | தொழில் | : | |
| த/பெ | : | சுப்பிரமணி | கிராமம் | : | |
| வயது | : | | தாலுகா | : | |
| | : | | மாவட்டம் | : | |

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. தாவா சொத்து லட்சுமிநாதனுக்கு பாதிக்கப்பட்ட சொத்து என்று சொன்னால் சரிதான் அவரிடம் இருந்து நான் கிரயம் பெற்றுள்ளேன். தாவா சொத்தை 28.11.2018, 6.12.2018 என்கிற இரண்டு கிரையங்களின் அடிப்படையில் பெற்றுள்ளேன். முதல் கிரையம் ரூபாய் 6 லட்சத்து 57 ஆயிரத்திற்கு பேசப்பட்டது என்றால் சரிதான். கிரையத்தின் போது நான் முழு தொகையும் கொடுக்காமல் 57 ஆயிரம் ரூபாய் தான் கொடுத்தேன் என்றால் ரூபாய் ஆறு லட்சத்திற்கு காசோலை கொடுத்திருந்தேன். 2 வது கிரையம் 7 லட்சத்து 80 ஆயிரத்திற்கு பேசினோம் என்றால் சரிதான். மேற்படி கிரயத்தின் போது நான் 80 ஆயிரம் ரூபாய் தான் கொடுத்தேன் என்றாலும் மீத தொகைக்கு ரூபாய் 7 லட்சத்திற்கான காசோலை கொடுத்தேன் என்றாலும் சரிதான். இரண்டு கிரையத்திலும் சேர்த்து ரூபாய் 13 லட்சம் கொடுக்க வேண்டியதாக இருந்தது என்று சொன்னால் சரிதான். நானும் வாதியும் உறவினர். அதன் அடிப்படையில் தான் 13 லட்சம் பாக்கி வைத்தும் கிரயம் செய்து கொடுத்தார் என்று சொன்னால் காசோலை வாங்கிக் கொண்டு கிரையம் செய்து கொடுத்தார். நான் வாதியிடம் காசோலையை வசூலுக்கு போட வேண்டாம் என்றும் லோன் வாங்கிய பிறகு

வசூலுக்கு போட வேண்டும் என்றும் சொன்னேன் என்று சொன்னால் சரியல்ல.

2. நான் கூறியவாறு நடந்து கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வாதியை அணுகி லோன் கிடைத்துவிட்டதாகவும் காசோலையை திரும்ப கொடுக்குமாறும் தொகையாக மீத தொகையை திரும்ப செலுத்தி விடுவதாகவும் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வாதிதான் தொகையை கையில் கொடுத்து விடுமாறு சொல்லி வாங்கிக் கொண்டார். வாதி ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார் என்று சொன்னால் அவர் நிறைய தொழில் செய்து வருகிறார். நான் கூறுவது போல அவருக்கு எந்தவிதமான கடனும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் உறவினர் என்ற அடிப்படையில்தான் வாதி காசோலைகளை திரும்ப கொடுத்து விட்டார் என்றாலும் ஆனால் நான் நேர்மையாக நடந்து கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**வாதி தரப்பில் காலஅவகாசம் கோரப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.11.21 18:41:28 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.